# மத சகிப்பின்மை

## பெற்றோர், பராமரிப்பாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான தகவல்

### எங்கள் அர்ப்பணிப்பு

திணைக்களம் மாணவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் கலாச்சார, மொழி, மத மற்றும் ஆன்மீக பன்முகத்தன்மையை அங்கீகரித்து, மதிப்பளித்து மற்றும் மதிக்கிறது. NSW அரச பாடசாலைகளில் அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

### மத சகிப்பின்மை என்றால் என்ன?

மதம், பற்றுறுதி, நம்பிக்கை அல்லது ஆன்மீகம் ஆகியவற்றின் காரணமாக யாராவது மோசமாக, நியாயமற்ற ரீதியில் அல்லது மற்றவர்களை வித்தியாசமாக நடத்துவது மத சகிப்பின்மையாகும்.

### மத சகிப்பின்மையை மாணவர்கள் எவ்வாறு முறைப்பாடு செய்யலாம்

மத சகிப்பின்மையை அனுபவிக்கும் மாணவர்கள் அதை ஆசிரியர் அல்லது பாடசாலை ஊழியர்களிடம் தெரிவிக்க வேண்டும். மாணவர்கள் தங்கள் பாடசாலை இணையதளத்தில் உள்ள தொடர்பு விவரங்களைப் பயன்படுத்தி தங்கள் பாடசாலையை அழைக்கலாம் அல்லது மின்னஞ்சல் செய்யலாம்.

சில சமயங்களில் மத சகிப்பின்மை இனப்பாகுபாடு கூறு ஒன்றை கொண்டிருக்கலாம். இனவெறி பற்றிய புகாரை பாடசாலை ஊழியர்களில் எவருக்கும் அல்லது பாடசாலையில் உள்ள இனவெறி எதிர்ப்பு தொடர்பு அதிகாரியிடம் (Anti-Racism Contact Officer) தெரிவிக்கலாம். மேலும் தகவலுக்கு இனவெறி குறித்த புகார்கள் (Reports of racism) மற்றும் இனவெறி எதிர்ப்பு கொள்கை (Anti-racism policy) பக்கங்களைப் பார்க்கவும்.

### மாணவர்களுக்கு என்ன ஆதரவுதவி கிடைக்கும்?

மத சகிப்புத்தன்மையின்மையை அனுபவிப்பது அல்லது கண்டறிவது மாணவர்கள் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். மாணவர்களுக்கான தகவல் மற்றும் சேவைகள் பின்வரும் இணையதளங்களில் கிடைக்கின்றன:

- மாணவர்களுக்கான மனநல ஆதரவுதவி (Mental health support for students)
- மாணவர் கொடுமைப்படுத்துதல் எதிர்ப்பு பக்கங்கள் (Student anti-bullying pages)

# பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் எவ்வாறு மத சகிப்புத்தன்மையின்மையை புகாரளிக்க முடியும்

பெற்றோர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் தங்கள் சார்பாகவோ அல்லது ஒரு மாணவர் சார்பாகவோ அவர்களின் சம்மதத்துடன் மத சகிப்பின்மை குறித்து புகார் செய்யலாம்.

மத சகிப்பின்மை சம்பவம் நடந்த பாடசாலையிடம் புகாரளிக்க வேண்டும். பாடசாலை இணையதளத்தில் உள்ள தொடர்பு விவரங்களைப் பயன்படுத்தி பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் நேரில், மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் புகார் செய்யலாம்.

பாடசாலையைத் தொடர்புகொள்ளும் போது உங்களுக்கு ஒரு உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி தேவைப்பட்டால், 131 450 என்ற எண்ணில் தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையை அழைத்து, உங்களுக்குத் தேவையான மொழியையும், நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணையும் தொலைபேசி இயக்குனரிடம் தெரிவிக்கவும். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

## பெற்றோருக்கு என்ன ஆதரவுதவி உள்ளது?

பெற்றோருக்கான தகவல் மற்றும் ஆதரவுதவி பின்வரும் இணையதளங்களில் கிடைக்கிறது:

- மனநலம் மற்றும் நல்வாழ்வு ஆதரவுதவி (Mental health and wellbeing support)
- பெற்றோருக்கு என்ன ஆதரவுதவி உள்ளது? (What support is available to parents?)

# மேலதிக நடவடிக்கைகள்

மேலும் ஆதரவுதவிக்கு அல்லது அமைப்பு முழுவதும் சகிப்பின்மை இருப்பதாக நீங்கள் நம்பினால், 1300 679 332 என்ற மத சகிப்பின்மையின் உதவி எண்ணை அணுகவும், மேலும் அந்த அழைப்பு மத சகிப்பின்மை பற்றியது என்பதை தொலைபேசி இயக்குனரிடம் தெரியப்படுத்தவும். தேவைப்பட்டால் தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையைப் பயன்படுத்தவும். பின்வரும் சேவைகள் உதவி எண்ணில் கிடைக்கும்:

- தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய தகவல்கள்
- தொடர்புடைய பகுதிகளுக்கு புகாரை பரிந்துரைப்பது
- பொருத்தமான ஆதரவுதவி சேவைகளை சிபாரிசு செய்வது
- புகார்களுக்கு நியாயமான தீர்வுகளைக் கண்டறிவது.

# புகார் செய்ய

மாணவர்கள், பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் புகார் செய்வதற்கு மொழிபெயர்க்கப்பட்ட புகார் செய்வதற்கான விரைவான குறிப்பு வழிகாட்டியில் (quick reference guide for making a complaint) உள்ள படிகளைப் பின்பற்றி புகார் செய்ய முடியும். மொழிபெயர்க்கப்பட்ட ஆதரவுதவி நபர்கள் மற்றும் குரல்கொடுப்பவர்கள் பக்கத்தில் (support persons and advocates) புகார்களைப் பற்றி மேலும் அறிந்துக் கொள்ளவும்.

# தொடர்புடைய துறை சார்ந்த கொள்கைகள்

- இனவெறிக்கு எதிரான கொள்கை (Anti-racism policy)
- பன்முகக் கல்விக் கொள்கை (Multicultural education policy)
- மாணவர் நடத்தை கொள்கை (Student behaviour policy)